(6 pages) **Reg. No. : .......................**

**Code No. : 22108** **Sub. Code : G 1 TL 21**

U.G. DEGREE EXAMINATION, APRIL 2016.

Second Semester

Part I — Tamil

செய்யுள், இலக்கணம், உரைநடை,
வாழ்க்கை வரலாறு, இலக்கிய வரலாறு

(For those who joined in July 2012 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

சரியான விடையைத் தேர்வு செய்க :

1. ஆடகச்சீர் மணிக்குன்றே என்று சிவனைப் போற்றியவர்

(அ) சுந்தரர் (ஆ) சம்பந்தர்

(இ) நாவுக்கரசர் (ஈ) மாணிக்கவாசகர்

2. மக்கட் பண்பில்லாதவர் எதனைப் போன்றவர் என்கிறார் வள்ளுவர்

(அ) அரக்கர் (ஆ) விலங்கு

(இ) மரம் (ஈ) நெருப்பு

3. மழைபெய்ய நெல் விளைந்தது

(அ) குறிப்புத் தொடர் (ஆ) வினைமுற்றுத் தொடர்

(இ) வினை எச்சத் தொடர் (ஈ) குறிப்பு வினைமுற்று

4. 'அம்ம' என்பது

(அ) பெயர்ச் சொல் (ஆ) வினைச் சொல்

(இ) இடைச் சொல் (ஈ) உரிச் சொல்

5. மரம் மன்னிக்குமா? பூக்கள் இருந்த இடத்தில் கட்சிக் கொடிகள் என்ற ஹைகூவை எழுதியவர்

(அ) ராஜமுருகு பாண்டியன்

(ஆ) செல்லப் பாண்டியன்

(இ) மித்ரா முருகு பாண்டியன்

(ஈ) ராம பாண்டியன்

6. மோகமுள் புதினத்தின் ஆசிரியர்

(அ) சிவசங்கரி (ஆ) சுஜாதா

(இ) அனுராதா ரமணன் (ஈ) தி. ஜானகிராமன்



Nesamony Memorial Christian College, Marthandam

7. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் மனைவியின் பெயர்

(அ) ஞானம்பாள் (ஆ) கௌராம்பாள்

(இ) கௌதாம்பாள் (ஈ) சௌந்தரம்பாள்

8. பட்டுக்கோட்டையார் சக்தி நாடக சபாவில் சேருவதற்கு சிபாரிசுக் கடிதம் கொடுத்தவர்

(அ) டி.ஆர். சுந்தரம் (ஆ) டி.எஸ். துரைராஜ்

(இ) டி. எஸ். பாலையா (ஈ) எஸ்.பி. தங்கவேலு

9. பன்னிரண்டாம் திருமுறையைப் பாடியவர்

(அ) திருநாவுக்கரசர் (ஆ) சேக்கிழார்

(இ) மாணிக்கவாசகர் (ஈ) திருமூலர்

10. நான்மணிக்கடிகையின் ஆசிரியர்

(அ) விளம்பி நாகனார் (ஆ) காரியாசான்

(இ) குமரகுருபரர் (ஈ) நல்லாதனார்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

11. (அ) திருமூலர் கூறும் வாழ்க்கைத் தத்துவங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஈகையின் பயன்கள் குறித்து நாலடியார் கூறுவன யாவை?



12. (அ) வினைச்சொல் என்றால் என்ன? வியங்கோள் வினைமுற்றினைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) இடைச்சொல்லின் இலக்கணம் கூறி, ஏகார இடைச்சொற்களை விளக்குக.

13. (அ) திட்டமிட்டுப் படித்தல் குறித்து ம. திருமலை கூறும் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) அகப்பேய் சித்தர் பாடல்களில் காணப்படும் வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்க.

14. (அ) பட்டுக்கோட்டையார் அறம்பாடிப் பணத்தை வரவழைத்தவர் என்று கார்த்திகேயன் கூறுவதனை விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'மக்கள் கவிஞர்' என்னும் பட்டத்தை பட்டுக்கோட்டையார் பெற்ற நிகழ்ச்சி பற்றி எழுதுக.

15. (அ) முதல் ஆழ்வார்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திரிகடுகம் – குறிப்பு வரைக.



[P.T.O.]

Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) 'அன்றில் முட்டாது அடையும் சோலை' என்று சிவனை சுந்தரர் போற்றும் திறத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பண்புடைமை குறித்து குறள் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. (அ) நீவிர் வசிக்கும் பகுதியில் சாலை வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) பத்திரிக்கையில் விளம்பரம் எவ்வாறு வெளியிடலாம் என்பது குறித்து விவரிக்க.

18. (அ) கூட்டுக் குஞ்சுகள் நாவலில் தீப்பெட்டித் தொழிலாளர்களின் நிலை பற்றிய செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பிறவிகளைத் தவிர்ப்பவன் இறைவன் என்று கூறும் சிவபுராணக் கருத்தைப் புலப்படுத்துக.



19. (அ) பட்டுக்கோட்டையார் எம்.எஸ்.வி. இருவரும் முதன்முதலாகச் சந்தித்த நிகழ்வை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பட்டுக்கோட்டையாரின் இறுதிநாட்கள் என்று கட்டுரையாசிரியர் நினைவு கூறும் செய்திகளைத் தெளிவுபடுத்துக.

20. (அ) சைவ சமயம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இஸ்லாமியர்களின் இலக்கியப் பணியினைப் புலப்படுத்துக.

---



Nesamony Memorial Christian College, Marthandam